
# விஜயநகரப் பேரரசும்
# கலாசார மறுமலர்ச்சியும்





இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

# விஜயநகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்

பதிப்பாசிரியர்கள்

பேராசிரியர் சி. பத்மநாதன்

க. இரகுபரன்

ஸ்ரீ. பிரசாந்தன்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | விஜய நகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும் |
| பதிப்பாசிரியர்கள் | : | பேராசிரியர் சி. பத்மநாதன் |
| | | க.இரகுபரன் |
| | | ஸ்ரீ. பிரசாந்தன் |
| முதற் பதிப்பு | : | 2010 |
| வெளியீடு | : | இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் |
| | | 248 1/1, காலி வீதி, கொழும்பு 4, இலங்கை. |
| அச்சு | : | யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட், 48B, புளுமெண்டால் வீதி, கொழும்பு 13. |
| பக்கங்கள் | : | XXVIII + 684 + 32 கலர் படங்கள் |
| பிரதிகள் | : | 1000 |
| அளவு | : | 1/8 |
| கடதாசி | : | 80 ஜி. எஸ். எம். வெள்ளைத்தாள் |
| விலை | : | 500/= |

ISBN :978-955-9233-17-6

| | | |
|---|---|---|
| Title | : | Vijayanagara Peerarasum Kalasara Marumalarchchiyum |
| Editors | : | Prof. S. Pathmanathan |
| | | K. Raguparan |
| | | Sri. Prasanthan |
| First Edition | : | 2010 |
| Published by | : | Dept. of Hindu Religious & Cultural Affairs |
| | | 248, 1/1, Galle Road, Colombo 4. |
| Printers | : | Unie Arts (Pvt) Ltd., 48B, Bloemendhal Road, Colombo 13, Sri Lanka. |
| | | Tel: +94 11 2330195 |
| No. of Pages | : | XXVIII + 684 + 32 Colour Photos |
| No. of Copies | : | 1000 |
| Size | : | 1/8 |
| Paper Used | : | 80 Gsm White Paper |
| Price | : | 500/= |



# "தத்துவார்த்த அகமுரண்பாடுகளின் வெளிப்பாடாக சித்தர் சிவவாக்கியரின் பாடல்கள்" ஒரு கண்ணோட்டம்

திரு. ச. முகுந்தன்

## அறிமுகம்

நவநாதசித்தர்மரபு, பதினெண் சித்தர்மரபு என இந்தியச் சித்தர்மரபு இருநிலைப்படுத்தி நோக்கப்படுகிறது. வட இந்தியாவிற்குரியதாக நவநாதசித்தர்களும் தென்நாட்டில் குறிப்பாகத் தமிழ்நாட்டுக் குரியவர்களாக பதினெண்சித்தர்களும் அறியப்படுகின்றனர். நிசானந்தபோதம், பதினெண்சித்தர் பெரியஞானக்கோவை, அபிதானசிந்தாமணி, முதற்கொண்டு பல்வேறு அகராதிகள், சித்தர் பாடல் திரட்டுக்கள் வரையில் இப்பதினெண் சித்தர்களின் பெயர்கள், வரிசைக்கிரமம் தொடர்பில் கருத்தொருமிப்பைக் காண முடியாதுள்ளது.

எவ்வாறாயினும் பதினெண்சித்தர்களைத் திருமூலர் முதற்கொண்டு குறிப்பிடுகின்ற ஒரு போக்கும், அகத்தியர் முதற்கொண்டு வரையறைசெய்கின்ற ஒரு முறையுமென இரண்டு செல்நெறிகளை இவற்றிடையே பொதுவாக அவதானிக்க முடிகிறது.

எனினும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பதிப்பிக்கப்பட்ட பதினெண்சித்தர் ஞானக்கோவை எனும் நூலில் சிவவாக்கியரே பதினெண்சித்தர்களில் முதலாமவராக இடம்பெற்றிருக்கிறார். அதேவேளை சிவவாக்கியரைப் பதினெண்சித்தர்களுள் ஒருவராகக் குறிப்பிடாமலும் பல சித்தர் பனுவல் திரட்டுக்கள் வெளிவந்துள்ளன. எவ்வாறாயினும் சிவவாக்கியரின் பெயரில் இடம்பெற்றுள்ள ஐநூற்றுக்கு மேற்பட்ட பாடல்கள் சித்தர் இலக்கியத்தில் சிவவாக்கியர் பெற்றுள்ள சிறப்பிடத்தினைப் பறைசாற்றுவனவாகவே அமையப்பெற்றுள்ளன.

## சிவவாக்கியர் பற்றி அறிய உதவும் மூலங்கள்

சிவவாக்கியரின் வாழ்க்கை வரலாறு பற்றித் தெளிவாக வரையறுத்துரைக்கவல்ல மூலங்கள் எதுவும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. சிவவாக்கியர் வேதியர் குலத்தில் பிறந்தார் என்றும் குறவர்குலப்பெண்ணை மணந்தார் என்றும் கொங்கணச்சித்தருடன் கெழுதகைமை பூண்டார் என்றும் **அபிதான சிந்தாமணி** குறிப்பிடுகிறது.[1]

சாம்பசிவம் பிள்ளையின் **மூலிகை அகராதி** சிவவாக்கியர் திருமூலர் கூட்டத்தாரில் செம்படவக் கன்னியின் கர்ப்பத்திற் பிறந்தவர் என்றும் சைவவிரோதக் கருத்துக்களைப் பரப்பியதனால் மதுரையை ஆண்ட மன்னனொருவனால் தண்டிக்கப்பட்டார் என்றும் சிலகாலம் நாத்திகவாதியாக விளங்கிய இவர் பின்னர் சித்தரானார் என்றும் குறிப்பிடுகிறது.[2]

**தமிழ்ப்புலவர் அகராதி** இவர் முதலில் சைவராக இருந்து பின்னர் வைணவராகித் திருமழிசை ஆழ்வார் ஆகினார் என்றும் இவர் சித்தர்களுள் காலத்தால் முற்பட்டவர் என்றும் கூறுகிறது.

திருமழிசையில் பிருகு முனிவருக்கும் தேவமங்கைக்கும் பிறந்த திருமழிசையானைத் திருவாளன் எனும் வேடன் வளர்க்க வளர்ப்புத்தந்தையின்

சமயமாகிய வைணவத்தினைத் தழுவிப் பின்னொருகாலத்தில் சைவத்திற்கு மாறிச் சிவவாக்கியர் ஆனார் என்ற கதையினைப் **பாவலர் சரித்திர தீபகம்** என்ற நூல் குறிப்பிட்டுள்ளது. அதேவேளை பார்கவ முனிவருக்குப் பிண்டமாகப் பிறந்து திருவாளன் எனும் குறவனால் வளர்க்கப்பட்டு பல்வேறு சமயங்களில் புகுந்துழன்று பின்னர் பேயாழ்வாரால் மீட்கப்பட்டு பத்திசாரர் (திருமழிசைஆழ்வார்) ஆனார் என்ற வைணவ சம்பிரதாயம் சார்ந்த ஐதீகமும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.[3]

சிவவாக்கியரின் வாழ்க்கைவரலாறு பற்றிக் குறிப்பிடப்பட்ட மேற்கூறிய அனைத்து விடயங்களும் ஐதீகப்பண்புடையனவே அன்றி வரலாற்று ரீதியாக நிறுவப்பட்டவை அல்ல என்பதும் இவ்விடயத்தில் மனங்கொள்ளத்தக்கன.

### சிவவாக்கியர் காலம்

சித்தர்கள் வாழ்ந்த காலத்தை வரையறை செய்வதில் பொதுவாகவே எதிர்நோக்கப்படுகின்ற சிக்கல்கள் சிவவாக்கியர் காலத்தைத் துணிவதிலும் ஏற்படுகின்றன. ந. சி. கந்தையாப்பிள்ளை, ஞா. தேவநேயப்பாவாணர் ஆகியோர் கி.பி. 7–8 ஆம் நூற்றாண்டுக்குரியவராகச் சிவவாக்கியரைக் கருதுகின்றனர். ஆயினும் இது ஊகம் சார்ந்த காலக்கணிப்பே எனலாம். மு. அருணாசலம் என்பவர் தத்துவராயர், சிவஞானவள்ளல், மறைஞானசம்மந்தர் ஆகியோரினைத் தொடர்புபடுத்தியும் மெய்கண்ட சாத்திரங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள தொடர்களைச் சுட்டிக்காட்டியும் சிவவாக்கியரை கி.பி. 14ஆம் நூற்றாண்டின் கடைக்கூறிற்கும் 15ஆம் நூற்றாண்டின் முற்கூறிற்கும் இடைப்பட்ட காலத்திற்குரியவர் என நிறுவமுற்பட்டுள்ளார்.[4]

சிவவாக்கியர் தமது பாடல்களின் திரட்டுக்குச் சிவவாக்கியம் எனத் தாமே பெயர் சூட்டியுள்ளார் என்பதனை **அரியதோர் எழுத்தையுன்னிச் சொல்லுவேன் சிவவாக்கியம்**[5] என்ற சிவவாக்கியரின் கூற்றிலிருந்து அறியமுடிகிறது. சித்தர் சிவவாக்கியருடைய பாடல்களின் எண்ணிக்கை ஐநூற்றெட்டில் இருந்து ஐநூற்றைம்பது வரையில் பதிப்புக்குப் பதிப்பு மாறுபட்ட தொகை கொண்டதாக விளங்குகின்றது.

## கட்டுரையின் நோக்கம்

சிவவாக்கியர் யார்? அவர் பூர்வீகம் எது? அவர் வாழ்ந்தகாலம் எது? அவர் எந்தச் சமயத்தைச்சார்ந்திருந்தார் என்பவற்றில் நிலவுகின்ற குழப்பநிலை அவரது பாடல்களின் மெய்யியல் சார்ந்த பொருளமைதிவரையில் தொடர்கிறது. சித்தர்கள் சடங்குநிலை சார்ந்த சமயநெறிகளிற்கு அப்பாற்பட்டவர்கள் என்பது உண்மையே. ஆயினும் அவர்களின் மெய்யியற்றளம் ஸ்திரமானது, தெளிவானது, வரையறைப்படுத்தக்கூடியது. **சித்தர் சமயம்** என்பதனை துணிவது சிக்கலானது. ஆனால் **சித்தர் மெய்யியல்** என்பதனை வரையறுப்பது சாத்தியமானது. ஆனால் சிவவாக்கியரைப் பொறுத்தவரையில் அவர் சஞ்சரிக்கின்ற மெய்யியற்றளமும் மிகவும் சிக்கலானது அகமுரண்பாடுடையது. இம்முரண்பாடுகளைப் பற்றி ஆராய முற்படுவதாகவே இக்கட்டுரை அமைகிறது.

பிரபஞ்சத்தின் தோற்றம், நிலைபேறு பற்றி ஆராயமுற்படும் சிவவாக்கியர் வைதிக தத்துவமரபுகளைச் சார்ந்தவராகத் தன்னை இனங்காட்டிக் கொண்டுள்ளார். குறிப்பாகக் காரண காரியத்தொடர்புகளைச் சீர்தூக்கி விளக்கித் தன்னை ஒரு சத்காரியவாதியாகவும் எண்ண வைத்திருக்கிறார்.

*வித்தில்லாத சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை*
*தச்சில்லாத மாளிகை சமைந்த வாறதெங்கனே*[6]

என்ற பாடல் அடிகள் கட்டடக் கலைஞன் இல்லாமல் கட்டடம் அமைய முடியாதது போல இச்சடப்பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கும் ஒரு காரணப் பொருளின் அவசியம் என்பதை வலியுறுத்துவனவாக அமையப் பெற்றுள்ளன.

இங்கே "தச்சில்லாத மாளிகை சமைந்தவாறு எங்கனே" என்ற எடுத்துக் காட்டு சைவசித்தாந்திகள் காரண காரியத் தொடர்பு பற்றி விளக்குமிடத்துப் பயன்படுத்தியுள்ள

*ஆரியன் குலாலனாய் நின்றாக்குவன் அகிலமெல்லாம்*[7]

என்ற குயவன், பானை உதாரணங்களை நினைவூட்டுவதாய் உள்ளது.

மேலும் சிவவாக்கியர்,

"*அண்டம் நீ அகண்டம் நீ ஆதிமூலமானோன் நீ*"[8]

என்ற பாடல்அடிகளின் மூலமும் ஏதோ ஒருவித வைதீக தரிசனச் சாயலுடைய காரணகாரிய சம்பந்தத்தையே வெளிப்படுத்தியுள்ளார் என்ற முடிவுக்கு வரத்தோன்றுகிறது.

ஆயினும் உயிரின் தோற்றம், உடலுக்கும் உயிருக்குமான தொடர்புகள் பற்றிய சிவவாக்கியரின் சிந்தனைகளில் முன்னைய தளத்திலிருந்து சடுதியான மாற்றங்களையும் முரண்பாடுகளையும் அவதானிக்க முடிகின்றது.

"*கருத்தரிக்கும் முன்னெலாம் காயம் நின்றது எவ்விடம்*
*உருத்தரிக்கும் முன்னெலாம் உயிர்ப்பு நின்றது எவ்விடம்*
*அருள்தரிக்கும் முன்னெலாம் ஆசை நின்றது எவ்விடம்*[9]

"கருப்பைக்குள் பதியப்பெற்று உருவமெடுத்து வருவதற்கு முன்பாக இந்த உடலும் உயிரும் எங்கே இருந்தன. அகவுணர்வு வந்த பின்னரே ஆசை தெரிந்தது. அவ்வாறாயின் அதற்கு முன் ஆசை எங்கிருந்தது?" என்ற ஐயங்களை மேற்கூறிய பாடலடிகளூடாக முன்னிறுத்திய சிவவாக்கியர் மீண்டும் முரண்படுகிறார். இவ்விடத்தில் முன்பு சத்காரிய வாதம் பேசிய சிவவாக்கியரைக் காணமுடியவில்லை; மாறாக ஈஸ்வரவாதத்தையே அவநம்பிக்கையுடன் நோக்குகின்ற ஒருவனின் வினாக்களாகவே இவை தொனிக்கின்றன. இதனை மேலும் உறுதிசெய்யும் வகையிலேயே பின்வரும் பாடல்கள் அமையப்பெற்றுள்ளன.

"*கருத்தரிக்கும் முன்னெலாம் காயம் நின்றது தேயுவில்*
*உருத்தரிக்கும் முன்னெலாம் உயிர்ப்பு நின்றது அப்புவில்*
*அருள்தரிக்கும் முன்னெலாம் ஆசை நின்றது வாயுவில்*"[10]

கருத்தரிப்பதற்கு முன் உ்டல் தீயிலும் (தேயு) உயிர் நீரிலும் (அப்பு) ஆசை வாயுவிலும் உறைந்திருப்பதாக விளக்கந்தருகின்ற மேற்குறிப்பிட்ட பாடல்

அடிகள் உயிர் உடல் இணைப்பையும் உயிரின் தோற்றத்தினையும் பௌதீகசேர்க்கைகளால் இயல்பாகத் தோன்றி நடைபெறும் நிகழ்வாக (வெற்றிலை பாக்கு சுண்ணாம்பால் தோன்றும் சிவப்பாக) விளக்கமுற்படுகின்ற பூதவாதத்தின் தத்துவச்சார்பையே உணர்த்தி நிற்கின்றன.

மேலேட்டமாக சத்காரிய வாதத்தின் சாயல் இதில் தெரிவது போல் தோன்றினாலும் உண்மையில் இது ஆரம்பவாதத்தின் கருத்துநிலை என்பது ஆழ்ந்து நோக்கின் புலனாகும். இக்கருத்தினை மேலும் அரண்செய்வதாகவே,

*"உடம்பு உயிர் எடுத்ததோ*
*உயிர் உடம்பெடுத்ததோ"*[11]

என்ற சிவவாக்கியரின் கேள்விகள் அமைந்துள்ளன. இந்த இரண்டு ஐயவினாக்களில் முதல்வினாவில் பூதவாதத்தின் செல்வாக்கு உறைந்துள்ளது. இரண்டாம் வினாவில் வேதாந்தம் சைவசித்தாந்தம் உள்ளிட்ட வைதீகத்தத்துவங்களின் சாயல் தெரிகின்றது. இப்பாடலில் இரண்டு அடிகள் பின்வருமாறு அமைகின்றன.

*"உடம்பு உயிர் எடுத்தபோது உருவம் ஏது செப்புவீர்*
*உடம்பு உயிர் இறந்தபோதும் உயிர் இறப்பதில்லையே"*[12]

அதாவது உடம்பே உயிரை எடுத்தது என்றே வைத்துக்கொண்டாலும் இவ்வுயிரை தனக்குள் எடுத்துக்கொள்வதற்கு முன் இந்த உடம்பின் இருப்பும் இயக்கமும் எவ்வாறு நிகழ்ந்திருக்க முடியும்? உடம்பை இயங்கவைப்பது உயிராயிற்றே? எனவே உயிரே உடம்பை எடுத்தது என்ற வகையில் தர்க்கபூர்வமான விவாதத்தைக் கட்டியமைத்துள்ள சிவவாக்கியர் சற்றுமுன் பேசிய பூதவாதத்தை ஒருநொடியில் தகர்த்துவிட்டு மறுபடியும் ஆஸ்தீக தரிசனவாதியாக ஆராயமுற்படுகின்றார்.

*"உடம்பு உயிர் இறந்தபோதும் உயிர் இறப்பதில்லையே"*[13]

என உயிரின் நித்தியத்தன்மை பற்றி உறுதியான நம்பிக்கை கொண்ட வைதீக தரிசனவாதியாகவே தன்னை மீண்டும் அடையாளங்காட்டிக் கொண்ட சிவவாக்கியர் இப்பாடலின் இறுதி அடியில்

*"உடம்பு மெய் மறந்து கண்டுணர்ந்து ஞானம் ஓதுமே"*[14]

என உரைத்திருக்கிறார். உபநிடதங்கள் ஆன்ம விடுதலைக்கான படிநிலைகளாக எடுத்துரைக்கின்ற சிரவணம், மனனம், நிருத்தியாசனம் வரையில் பொருள் விளக்கம் தரவல்லதாக இப்பாடல் அடிகள் அமையப்பெற்றுள்ளன.

மேலும் அருவமான உயிருக்கு உள்ளே உடம்பு இல்லை என்பதனால் உயிருக்குள் உடம்பு புகுந்ததாகச் சொல்லமுடியாது உடலொன்று தாயின் கருப்பையில் உருவாகிக் காத்திருந்தால் ஒழிய உயிரால் உடம்பினுள் புக இயலாது. உடல் இல்லாதபோது உயிர் அருவமாய் இருக்கும் அவ்வுயிரானது தனது முன்வினைகட்கு ஏற்ப உடல் எடுத்துப் பிறக்கும். உயிரையும் உடலையும் இணைத்து வைப்பது பரம்பொருளே எனக் குறிப்பிடுகின்ற சிவவாக்கியர் ஐயந்திரிபுக்கு இடமின்றி ஆஸ்திகச் சார்புடைய தத்துவ நிலைப்பாட்டையே இப்பாடலினூடாக விளம்பியிருக்கிறார்.

ஆரம்பத்தில் சற்காரியவாதத்தை பேசிய சிவவாக்கியர் பின்னர் சற்காரிய வாதத்தை நிராகரிக்கின்ற ஆரம்பவாதமாகிய பூதவாதத்தின் கருத்தியல்களை அடியொற்றிச் செல்பவர் போலக் காட்சியளிக்கிறார். ஆனால் மறுகணமே பூதவாதத்தை நிராகரித்து ஈஸ்வரவாதிகளின் பக்கம் தாவிவிடுகிறார். விடயம் இத்துடன் முடிந்துவிடவில்லை.

*"உடம்பு உயிர் இறந்தபோது உயிர் இறப்பதில்லையே"*

என உயிரின் நித்தியத்துவத்தை ஏற்றுக்கொண்ட சிவவாக்கியர் வினைகளின் அடிப்படையில் உயிர்களுக்குரிய உடலை இறைவன் சேர்ப்பிக்கிறான் என்று ஏற்றுக்கொண்ட சிவவாக்கியார் கன்மம் மறு பிறப்பை நிராகரித்தும் பாடியிருக்கிறார்.

*"கறந்தபால் முலைபுகா கடைந்த வெண்ணெய் மோர்புகா*
*உடைந்துபோன சங்கின் ஓசை உயிர்களும் உடல்புகா*
*விரிந்த பூவும் உதிர்ந்தகாயும் மீண்டும் போய் மரம்புகா*
*இறந்தவர் பிறப்பதில்லை இல்லை இல்லை இல்லையே "*[15]

இப்பாடலில் இயற்கையின் நிகழ்ச்சிகள், நியதிகளை எடுத்துக்காட்டாகக் கொண்டு சர்வநிச்சயமாக மறுபிறப்பை நிராகரிக்கின்ற சிவவாக்கியர் தனது கன்மம் மறுபிறப்பு பற்றிய முன்னைய நிலைப்பாட்டிலிருந்து நேர் எதிர் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கிறார். கன்மம் மறுபிறப்புடன் தொடர்புடைய வகையில் ஆஸ்திக தத்துவ சிந்தனை மரபின் ஆப்தவாக்கியப் பிரமாணங்களாகிய பிரஸ்தானத்திரயங்களில் கையாளப்பட்ட பழையசட்டை, புதிய சட்டை, புல்லின் நுனியும் புழுவும், வண்டியில் கட்டப்பட்ட குதிரை ஆகிய எடுத்துக்காட்டுகளுக்கான எதிர் நிலை மாதிரிகளாகவே சிவவாக்கியரின் எடுத்துக்காட்டுகள் அமைந்துள்ளன. ஆகவே வைதிக மரபிற் தழைத்தோங்கிய ஆஸ்திக தத்துவங்களாகிய வேதாந்த சைவ சித்தாந்தக் கொள்கைகளால் ஆப்த வாக்கியப் பிரமாணங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரஸ்தானத்திரயங்களின் வினைக்கொள்கை மறுபிறப்பு பற்றிய எடுத்துக்காட்டுக்களை மறுதலிக்கின்ற சிவவாக்கியரை வைதிக தரிசன மரபைச் சார்ந்தவராக ஏற்றுக்கொள்வதில் இடர்பாடுகள் உள்ளன.

ஆயினும் பிறிதோரிடத்தில் சிவவாக்கியர் தன்னை உபநிடதச்சிந்தனை மரபிற் தோய்ந்த பழுத்த வேதாந்தியாகவே வெளிப்படுத்திக் கொண்டுள்ளமையினையும் அவதானிக்க முடிகின்றது.

> *"என்னகத்துள் என்னை நான் எங்கும் நாடி ஓடினேன்*
> *என்னகத்துள் என்னை நான் அறிந்திலாத தன்மையால்*
> *என்னகத்துள் என்னை நான் அறிந்துமே தெரிந்தபின்*
> *என்னகத்துள் என்னையன்றி யாதும் ஒன்றும் இல்லையே "*[16]

"அகம் பிரம்மாஸ்மி", "தத்துவம் அஸி" ஆகிய உபநிடத மகாவாக்கியங்களும் அத்வைதிகளின் அவச்சேதவாதமும் மேற்குறிப்பிட்ட பாடலின் உள்ளார்த்தமாக மிளிர்வதனை அவதானிக்க முடிகிறது.

சிவவாக்கியர் இறைஇருப்பை ஏற்றுக்கொண்ட ஈஸ்வரவாதியாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டுள்ளார். சைவ தத்துவமரபில் நின்று சிவப்பரம்பொருளையும் திருவைந்தெழுத்தின் பெருமைகளையும் அவர் பாடல்கள் அநேக இடங்களில் விவரித்துள்ளன.

"அரியதோர் நமச்சிவாயம் ஆதிஅந்தம் ஆனதும்
ஆறிரண்டு நூறுதேவர் அன்றுரைத்த மந்திரம்
சுரியதோர் எழுத்தை உன்னி சொல்வேன்சிவவாக்கியம் "[17]

எனக் காப்புச்செய்யுளில் தன்னைச் சைவதத்துவவாதியாகவும் தனது வாக்கெல்லாம் சிவசம்பந்தமான வாக்குகளே எனவும் குறிப்பிட்டுள்ள இவர் சிவப்பரம்பொருளின் உருவநிலை, அருவநிலை, அருஉருவநிலை என மூன்று நிலைகள் பற்றி விவரித்துள்ளதுடன் அம்மூன்று நிலைகளோடும் திருவைந்தெழுத்துக்குள்ள தொடர்புபற்றியும் தமது பாடல்களில் விளக்கியுரைத்துள்ளார்.

"நவ்விரண்டும் காலதாய் நவின்றமவ் வயிறதாய்
சிவ்விரண்டு தோளதாய் சிறந்தவவ்வு வாயதாய்
யவ்விரண்டு கண்ணதாய் அமர்ந்து நின்ற நேர்மையில்
செவ்வையொத்து நின்றதே சிவாயமஞ் செழுத்துமே "[18]

என்ற பாடலை இவ்விதத்தில் வகைமாதிரியாகச் சுட்டிக்காட்டலாம்.

அண்டத்தின் உற்பவிப்பு பஞ்சாட்சர நாதத்திலிருந்து நிகழ்ந்ததாக வர்ணிக்கின்ற சிவவாக்கியர்

"ஆன அஞ்செழுத்துள்ளே அண்டமும் அகண்டமும்
ஆன அஞ்செழுத்துள்ளே ஆதியான மூவரும்"[19]

என மிக வெளிப்படையாக தன்னையொரு சைவவாதியாக அடையாளப்படுத்திக் கொண்டுள்ளார். ஆயினும் திருவைந்தெழுத்தைப் போற்றிய இதே சிவவாக்கியர் வைணவ சம்பிரதாயத்தின் எட்டெழுத்தின் மகத்துவத்தையும் பிறிதோரிடத்தில் போற்றியிருக்கிறார்.

"எட்டெழுத்தும் ஓதுவார்கள் அல்லல் நீங்கி நிற்பரே "[20]

இதுமட்டுமல்லாமல் ஸ்ரீ வைணவ சித்தாந்தமரபினர் குறிப்பிடுகின்ற இருபத்தைந்து தத்துவங்களைச் சுட்டியும் திருமாலுக்குரிய அஷ்டாட்சரத்தைப் போற்றியும் சிவவாக்கியர் பாடல் புனைந்துள்ளார்.

*"எட்டுமூன்றும் ஒன்றுமாகி நின்ற ஆதி தேவனே*
*எட்டுமாய பாதமோ டிறைஞ்சி நின்ற வண்ணமே*
*எட்டெழுத்து மோதுவார்கள் அல்லல் நீங்கி நிற்பரே "*[21]

மேற்கூறிய சிவவாக்கியரின் பாடலின் யாப்பு வடிவமும், பொருளமைதியும் திருமழிசையாழ்வாரின் பின்வரும் பாசுரத்துடன் பெரும்பாலும் ஒத்திசைவுற்றிருப்பதும் இங்கே சுட்டிக் காட்டத்தக்கது.

*"எட்டு மெட்டு மெட்டுமா யொரேழு மேழுமாய்*
*எட்டு மூன்று மொன்றுமாகி நின்ற ஆதி தேவனை*
*எட்டியான பேதமோடி இறைஞ்சி நின்று அவன்பெயர்*
*எட்டெழுத்து மோதுவார்கள் வல்லர் வானமாளவே "*[22]

சிவவாக்கியரின் பாடல்களில் வேறு பலவும் திருமழிசையாழ்வாரின் பாசுரங்களை ஒத்தனவாக அமைந்திருக்கின்றன.

கி.பி 15ஆம் நூற்றாண்டில் தோன்றிய "குரும்பரம்பரா ப்ரபாவம்" "ஆழ்வார்கள் வைபவம்" ஆகிய பனுவல்கள் சிவவாக்கியரைத் திருமழிசையாழ்வாரின் மறுப்பிறப்பாக விவரித்துள்ளமைக்கான காரணமும் இது குறித்ததாய் இருக்கலாம்.

இவைதவிர இராமநாமத்தினையும் சிவவாக்கியர் போற்றியிருக்கிறார்.

"நாடு நீ இராம ராம ராமவென்னும் நாமமே "[23]

சித்தர்கள் சமயமெய்யியலைக் கடந்தவர்கள். அந்தவகையில் சைவ, வைணவப் பிரிவுகளிடையே சமரசம் கற்பிக்கும் நோக்குடன் சிவவாக்கியர் இத்தகைய விடயங்களைப் பாடியிருக்கலாம் என்பதும் பொருத்தமே. ஆயினும் தான்சுட்டிய பரம்பொருள்

"அரியுமல்ல அயனுமல்ல அப்புறத்தில் அப்புறம்"[24]

என்றும்,

"தங்கம் ஒன்று ரூபம் வேறு தன்மையானவாறு போல்
செங்கண்மாலும் ஈசனும் சிறந்திருந்ததும்முள்ளே "[25]

என முன்னிலைப்பரவலாகச் சிவவாக்கியர் விவரித்துள்ள இடங்கள் சற்றுக் குழப்பத்தைத் தோற்றுவிக்கின்றன.

இங்கே சிவவாக்கியர் சுட்டவந்த பரம்பொருள் வைதிகஞ் சார்ந்த சைவ வைணவ பாரம்பரியங்களைக் கடந்ததா அன்றி வைதிக மரபையே மறுதலிக்க முற்படுகின்ற ஒருவர் சுட்டமுயன்ற பரம்பொருட்கொள்கையா என்பதும் ஆராயப்படவேண்டியதே.

சிவவாக்கியரின் பாடல்களில் பரவியிருக்கும் வைதிகச் சடங்காரங்களுக்கு எதிரான கடுமையான கண்டனங்களை மட்டும் கருத்திற்கொண்டு அவரை அவைதிக தத்துவங்களின் பேச்சாளராகக் கொள்வதும் பொருத்தமற்றதாகும். ஏனெனில் ஈஸ்வரவாதம், ஆன்ம இருப்புவாதம் ஆகியவற்றை சிவவாக்கியர் பல இடங்களில் ஏற்றுக்கொண்டே வந்திருக்கிறார். மேலும் பஞ்சாட்சரம், அஷ்டாட்சரம் இராமநாமம் ஆகியவற்றைப் போற்றியதோடு மட்டுமின்றி தத்துவநிலையில் அவைப்பற்றி விளக்கவும் முற்பட்டிருக்கிறார்.

எனவே தொகுத்து நோக்கும் போது சிவவாக்கியர் பாடல்களில் ஆழ்ந்திருக்கும் கவியுளத்தின் தத்துவ சஞ்சாரம் எத்தளத்திற்குரியது என்பதனை நிர்ணயம் செய்வது இயலாத விடயமாகவே தென்படுகிறது. ஔவையாரைப் போலவும் அகத்தியரைப் போலவும் அனேக சிவவாக்கியர்கள் தென்னிந்தியச் சித்தர்மரபில் இருந்திருந்தால் மட்டுமே இந்த ஐயங்களுக்கான விளக்கங்கள் சாத்தியப்படும். அவ்வாறாயின் சைவமெய்யியலுடன் முரண்பாடு கொண்ட ஒருவர் தனது பெயரைச் சிவவாக்கியராகக் குறிப்பிடுவது எதனைக் கருதியோ?

## அடிக்குறிப்புகள்

1. அபிதான சிந்தாமணி, ப, 665
2. நாராயணன். க, 2003, சித்தர் சிவவாக்கியர், ப, 46
3. பாவலர் சரித்திர தீபகம், பக், 223– 224
4. அருணாசலம். மு, தமிழ் இலக்கியவரலாறு 14ஆம் நூற்றாண்டு, பக், 421– 422
5. சிவவாக்கியர் பாடல்கள், பா. 1
6. மேலது, பா. 15
7. சிவஞானசித்தியார், சுபக்கம், பா. 38
8. சிவவாக்கியர் பாடல்கள், பா. 60
9. மேலது, பா, 165
10. மேலது
11. சிவவாக்கியர் பாடல்கள், பா. 87
12. மேலது
13. மேலது
14. மேலது
15. சிவவாக்கியர் பாடல்கள், பா. 46
16. மேலது, பா. 27
17. மேலது, பா. 01
18. மேலது, பா. 93
19. மேலது, பா. 02
20. மேலது, பா. 263
21. மேலது
22. திருமழிசையாழ்வார் திருச்சந்த விருத்தம், பாடல். 77
23. சிவவாக்கியர் பாடல்கள், பா.114
24. மேலது, பா. 09
25. மேலது, பா. 24